[1972 ஆகஸ்ட் 25

பட்டுவரும் திட்டங்கள், கட்டக் கருதியுள்ள திட்டங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரித்தல்.

(2) பாசனக் காயங்களுக்காக தற்போது வழங்கப்பட்டு வரும் நீர் போதுமானதா அல்லது நீர் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றதா என்பது குறித்து ஆராய்தல்.

(3) பல்வேறு மாநிலங்களில் நீர் பயன்படுத்துவதற்கு வசதியாக பௌதிகக் கூறுகள், பிற கூறுகளைக் குறித்த புள்ளி விவரங்களைச் சேகரித்தல்; பயிரிடப்படும் பகுதிகள்; வீட்டுக் காரியங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் தற்போது நீர் பயன்படுத்தப்படும் அளவு; நீர் வழங்கக் கருதியுள்ள அளவு; புனல் மின்சக்தி உற்பத்தி; கால்வாய் போக்குவரத்து; உப்பு நீர்க்கட்டுப்பாடு; பாசனமல்லாத பிற காரியங்கள் குறித்து புள்ளி விவரங்களைச் சேகரித்தல்.

(4) இது தொடர்பான பிற பொருள்கள்.

4. 1972 ஜூன் 15-ம் நாள் முதல் இக்குழு தன் பணியைத் தொடங்கும். இக்குழு 1972, செப்டம்பர் 15-ம் நாளுக்குள் தனது அறிக்கையை இந்திய அரசின் பாசன-மின்சக்தித்துறை அமைச்சகத்துக்கு பணிந்தனுப்பும்.

(புதுடில்லி இந்திய அரசின் பாசன-மின் சக்தித்துறை அமைச்சகத்தின் 29—7—1972-ம் நாளிட்ட தீர்மானத்தின் நகல்.)

தீர்மானம்.

காவிரி நீர் குறித்து தகவல் அறியும் குழு ஒன்றை அமைக்க இந்த அமைச்சகத்தின் 1972, ஜூன் 12-ஆம் நாளிட்ட 14/72-16- W.D. ஆம் எண்ணுள்ள தீர்மானத்தையொட்டி பம்பாய் உயர்நீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியான திரு. பி. டி. பால்(B.D. Bal) அவர்களை இக்குழுவின் நீதிபதி உறுப்பினராக இந்திய அரசு நியமித்துள்ளது.

இணைப்பு II.

297 ஆம் பக்கத்திலுள்ள 44-ம் எண்ணுள்ள உடுக்குறியிடப்படாத வினாவின் விடையைக் காண்க.]

(அ) ஐம்பத்தேழு சதம். தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் பரப்பு 60.83 லட்சம் ஹெக்டேர். மொத்த சாகுபடி நில்த்தில் புஞ்சை சாகுபடி நிலத்தின் சதவீதம் 57.

1972 ஆகஸ்ட் 25]

(இ) புஞ்சை சாகுபடி நிலத்தில் சராசரி ஏக்கர் வருமானம் ரூ. 342.

எச்.பி. கம்பு பயிடுவதால் ஏக்கர் வருமானம் ரூ. 265.

கே. 7 பருத்தி பயிரிடுவதால் ஏக்கர் வருமானம் ரூ. 245.

எச்.சி.யு. 6 (பாரரி) பருத்தி பயிரிடுவதால் ஏக்கர் வருமானம். ரூ. 515.

(உ) ஆம். உண்டு.

(எ) தற்போது மத்திய அரசின் உதவியுடன் திருநெல்வேலி மாவட்டம் கோவில் பட்டியிலும், திருச்சி மாவட்டம் புதுக்கோட்டையிலும் 'புஞ்சை நில அபிவிருத்தித் தீவிரத் திட்டம்' நடத்தப்பட்டு வருகிறது.

எல்லா மாவட்டங்களிலும் புஞ்சை நிலங்களின் மகசூலை அதிகரிக்கவும் அதன் வழியாக வருமானத்தை அதிகரிக்கவும் வேளாண்மைத் துறை நடவடிக்கை எடுத்துவருகிறது.

இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் கோவில்பட்டியிலும் புதுக் கோட்டையிலும் உழவர் பெருங்குடி மக்கட்குத் தேவையான விதை, உரம் மற்றும் பூச்சி மருந்துகள் வாங்க அரசு கடனும் மானியமும் கொடுத்து வருகிறது.

புதிய கிணறுகள் தோண்டவும், குழாய்க்கிணறுகள் அமைக்கவும், பம்பு செட்டுகள் வாங்கவும், டிராக்டர்கள் மூலம் நிலத்தை உழவும், மண் வளப் பாதுகாப்பு செய்யவும் அரசு கடனுதவி செய்து வருகிறது.

போன்ற புதிய முறைகளைக் கையாளவும் அரசு உழவர்கட்குக் கடனுதவியும் இலைகள் மூலம் உரச்சத்தை செலுத்துதல் (Foliar Spraying) மானியமும் அளிக்கிறது.

மேலும் புஞ்சை நில உழவர் பெருங்குடி மக்கள் வேளாண்மையையே முழுதும் நம்பியிராமல் இருக்க, வருமானத்தை அதிகப்படுத்தும் பொருட்டு பசு, ஆடு, பன்றி முதலிய கால்நடைகளை வாங்கவும், கோழிப் பண்ணைகளை அமைக்கவும் அரசு கடன் வழங்குகிறது.

வரட்சியை ஓரளவு தாங்கி, குறுகிய காலத்தில் அதிக மகசூலைத் தரக்கூடிய எச்.பி. கம்பு, எம்.சி.யு. 6 பருத்தி போன்ற பயிர்கள் பரவலாகப் பயிரிடப்பட்டு வருகின்றன.

மழை நீரைத் தேக்கி வைக்க இடத்திற்குத் தகுந்த 'மண் வளப் பாது காப்பு' முறைகளும் கையாளப்பட்டு வருகின்றன.